பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

Your Friends in FINANCE
SHABRA
207, Power House Road,
JAFFNA.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

நிதித்துறையில்
நாணயமிக்க நண்பன்
ஷப்ரு
207, மின்சாரநிலையவிதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஆனி மீ 07 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 06 ( 21 – 06 – 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 111

★ இலங்கையில் நிகழ்ந்துவரும்

# மனித உரிமை மீறல்களை விசாரிக்க நடுநிலைக் குழு

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையில் வற்புறுத்து

லண்டன், ஜூன் 21

இலங்கையில் நிகழ்ந்து வருவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்து, நடுநிலையான குழு ஒன்றை நிறுவி விசாரணை நடத்துக.

-இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசை வற்புறுத்தியிருக்கிறது.

நேற்று லண்டனில் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு வற்புறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டிருக்கும் இந்தியத் துருப்புகளுக்கு எதிராகவும் இந்த அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டு ஓராண்டுக் காலம் முடிவடையப்போகும் இச்சமயத்திலும் இலங்கையில் இன்னமும் மனித உரிமையை மீறும் வன்செயல்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

மனித உரிமை மீறல் நடவடிக்கைகளினால் இலங்கையின் தென் மாகாணத்தில் பல சிங்களவர்கள் காணமற் போகின்றனர்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குவிக்கப்பட்டிருக்கும் இந்தியத் துருப்புக்களும் தமிழ் மாகாணங்களில் நடக்கும் வன்செயல்களுக்குக் காரணமாகின்றன.

பழியுணர்ச்சி காரணமாக அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

1983ஆம் ஆண்டில் இருந்து 1987ஆம் ஆண்டு வரை 685 தமிழர் காணமற்போவதற்கு இலங்கைப் பாதுகாப்புப் படையே பொறுப்பு.

காணமற்போனவர்கள் பலர் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டனர். மற்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு பின் ரகசியமாகப் புதைக்கப்பட்டனர். இதற்குத் தகுந்த ஆதாரங்கள் உள்ளன.

ஒப்பந்தத்தின் கீழ் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் தாங்கள் நெடுநாள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவித்தனர்.

இன்னும் 650 தமிழர் விசாரணையின்றித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்துபோன மனித உரிமை மீறல்களுக்காகத் (6ஆம் பக்கம் பார்க்க)

## பஞ்சாப் மாநிலம் கலகப் பிரதேசம்!

புதுடில்லி, ஜூன் 21

பஞ்சாப் மாநிலம் முழுவதையும் கலகத்துக்குட்பட்ட பிரதேசமாக மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆறு மாதங்களுக்கு இந்த ஆணை அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆயுதப்படை, விசேட பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்த ஆணை நேற்று பிறப்பிக்கப்பட்டதாக புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் புதுடில்லியில் திலக் நகரில் உள்ள காய்கறிச் சந்தையில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மூவர் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டது. (ஒ - எ)

## மூதூரில் நடந்த மறியல் போராட்டம்

திருகோணமலை ஜூன் 21

மூதூர்ப் பகுதியிலும் கடந்த சனிக்கிழமை வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

ஈழப் புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) ஏற்பாட்டிலேயே இந்த மறியல் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

யுத்த நிறுத்தம், அமைதி, சமாதானம் இவற்றை வலியுறுத்தி ஈழப் புரட்சி அமைப்பு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு கட்டமாகவே கடந்த சனிக்கிழமை மூதூர்ப் பகுதியில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. (ஒ - 150)

தென் மாகாணத்தில் நேற்று

## வீதித்தடை செய்தவர்கள் மீது பொலீஸ் சூடு; மாணவன்பலி!

கொழும்பு, ஜூன் 21

தென் மாகாணத்தில் திக்வல்ல விஜித மகா வித்தியாலய மாணவர் நேற்று நடத்திய வீதித் தடை ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து இடம்பெற்றதாகக் கூறப்படும் மோதலில் பொலீஸார் சுட்டு ஒரு மாணவன் உயிரிழந்தான்.

மேலும் நான்கு மாணவர்கள் படுகாயமடைந்தனர் என்று தகவல் அமைச்சு அறிவித்தது.

இச்சம்பவம் குறித்து பூரண விசாரணை ஒன்றை நடத்தும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன உத்தரவிட்டார் என்றும் தகவல் அமைச்சு மேலும் தெரிவித்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்றுக் காலை 11 மணியளவில் திக்வல்லை மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்து விட்டு வீதிக்கு வந்து வாகனங்களைப் போகவிடாது தடுத்தனர்.

அப் போது அவ்வீதியால் சென்று கொண்டு இருந்த பொலீஸ் வாகனம் ஒன்றும் தடுக்கப் (6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



தென் மாகாணத்திலே நிலைமை மெத்த மோசமாகிக் கொண்டு வருகுது என்டு சொல்லுங்கோ பின்னே...!

### யாழ். நகரில் கல்கத்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இந்திய அமைதிப் படையின் தளபதி மேஜர் ஜெனரல் கல்கத் நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்தார்.

நேற்றுக்காலை பத்து மணி அளவில் யாழ். கோட்டை முகாமில் ஹெலிக்கொப்டரில் வந்திறங்கிய கல்கத், கச்சேரி நசப கொமாண்டன்ட் அலுவலகத்துக்கு பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

இவர் யாழ்ப்பாணத்தின் சில பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்தார் எனத்தெரிய வருகிறது. (ஒ-10)

### கொக்குவில் கோண்டாவிலில் ரதோற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கொக்குவில் மாத்தளைக் கந்தசுவாமி கோவில், கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் ரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது.

இந்த உற்சவங்கள் பற்றிய சிறப்பிதழ்கள் மூன்றும், நான்காம் பக்கங்களில் ...

### புதிர் போடுகிறார் தொண்டா!

கொழும்பு, ஜூன் 21

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தேர்தல்கள். அடுத்த தேர்தலில் யாரை ஆதரிப்போம் என்பதற்கான பதிலைத் தெரிவிப்பேன். அமைச்சர் தொண்டமான் இப்படித் தெரிவித்தார்.

அடுத்த பொதுத்தேர்தலில் இ. தொ. கா. யாரை ஆதரிக்கும்? எதிரணியையா? ஐக்கிய தேசியக் கட்சியையா? என்ற கேள்விக்கு பதில (6 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் சூடு; நகர் வெறிச்சோடியது

பருத்தித்துறை, ஜூன்21

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்துப் பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி வரையான பகுதிகளில் பதற்றம் நிலவியது.

நேற்றுக் காலை பருத்தித்துறை நகரப் பகுதியில் பாடசாலைகள், அலுவலகங்கள், கடைகள் வழமைபோலத் திறக்கப்பட்டிருந்தன, சன நடமாட்டமும் அதிகரித்திருந்தது.

ஆனால் நண்பகல் 1-00 மணியளவில் பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு மேற்குப் பக்கத்தே ஐயனார் கலட்டிப் பக்கத்தில் இருந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் பலமாகக் கேட்கத் தொடங்கின.

அதனையடுத்து நகரப் பகுதியில் பதற்றம் நிலவ ஆரம்பித்தது. கடைகள் மூடப்பட்டன. பாடசாலையிலிருந்த மாணவர்களும், ஆசிரியர்களும் அவசர அவசரமாக வீடுகளுக்குச் செல்ல முற்பட்டனர். அலுவலர்களும் அலுவலகங்களை மூடிவிட்டு வீடு சென்றனர்.

மினி பஸ்களும் பருத்தித்துறை நகர்ப் பகுதியை விட்டு அன்று சென்று புலோலியிலிருந்து தமது சேவைகளை நடத்தின. இந்தப் பகுதி அமைதிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. (ஒ-9-126)

### சுபநேரம்

21 – 06 – 1988

சுபநேரம்:
10.24 முதல் 11.54 வரை

ராகுகாலம்:
2.54 முதல் 4.24 வரை

இரவு நடேசரபிஷேகம்

அமைதிப்படை மீதான குற்றச்சாட்டு:

# இந்திய அரசு மறுப்பு!

புதுடில்லி, ஜூன் 21

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் அமைதிப்படை மீது தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களை இந்திய அரசு மறுத்துள்ளது.

அக்குற்றச்சாட்டுக்கள் வெறும் கட்டுக்கதை, ஆதாரமற்றவை என்று புதுடில்லியில் நேற்று இந்திய அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமைதிப்படை மீது தெரிவிக்கப்படும் திட்டவட்டமான முறைப்பாடுகள் அனைத்தும் விசாரிக்கப்பட்டு வருகின்றன,

அப்படி இதுவரை விசாரிக்கப்பட்ட பெரும்பாலான முறைப்பாடுகள் ஆதாரமற்றவையாகவே காணப்பட்டன.

அப்படி நிரூபிக்கப்பட்ட இடத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது உடன் நடவடிக்கையை இந்திய அமைதிப்படை எடுத்து வருகின்றது.

இப்படிப் புதுடில்லிப் பேச்சாளர் சொன்னார். (உ-எ)

## பயங்கரவாத தடை சட்டத் திருத்தம் சபையில் நிறைவேறியது

கொழும்பு, ஜூன் 21

குற்றவியல் திருத்தச் சட்டக் கோவை சட்டமூலம், பயங்கரவாதத் தடைச் சட்டத்திருத்தம் ஆகியன நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, சம்யூலஸ்ட் கட்சி எம்பிக்கள் சட்டமூலங்களை எதிர்த்து வாக்களித்தனர்.

விவாதத்தை முடித்து (6ஆம் பக்கம் பார்க்க)

இன்று வடமராட்சியில்

# கடல்வலயச்சட்டத்தை நீக்கக்கோரி பேரணி

## பகிஷ்கரிப்பு நடத்தவும் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 21

கடல் வலயச் சட்டத்தை நீக்கக் கோரி வடமராட்சி மக்கள் அவையும், வடமராட்சி மீனவர் சங்கமும் இன்று பேரணியொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளன. இன்று பூரண பகிஷ்கரிப்பு அனுஷ்டிக்கும்படியும் அவை கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாகவடமராட்சி மக்கள் அவை விடுத்திருக்கும் அறிக்கையில்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நீடித்த கடல்வலயச் சட்டத்தின் மூலம் இப்பகுதியில்மீன்பிடிக் கைத்தொழிலைச் சார்ந்துவாழ்கின்ற 60சத வீத மக்கள் இன்று மெல்ல மெல்ல பட்டினிச் சாவை எதிர் நோக்கிய வண்ணம்வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இன்று மீனவர்கள் இரவில் கடலுக்குச் செல்ல முடியாது பகலில் மட்டும் அதுவும் பலத்த கட்டுப்பாடுகளுடன் அனுமதிக்கப் படுகின்ற (6 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் ஆதரவு

வடமராட்சி, ஜூன் 21

வடமராட்சி மீனவர்கள் இன்று நடத்தும் பேரணி, பகிஷ்கரிப்பு ஆகியவற்றுக்கு வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக்குழு பூரண ஆதரவு வழங்கியிருக்கிறது.

இது தொடர்பாக ஒருங்கிணைப்புக்குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா அரசினால் கொண்டுவரப்பட்ட இச்சட்டம் ஒருவகையில் தமிழீழத்தின்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையென்றே இந்திய அரசினாலும் கண்டிக்கப்பட்டது.

சிங்கள அரசு ஓரளவு கருணை காட்டி பாதிப்புற்ற மீனவருக்கு நிவாரணம் வழங்கி உதவியது. (6ஆம் பக்கம் பார்க்க)

சுன்னாகம் மயிலணிக் கந்தன்
சித்திரத் தேர் மீது
சிங்காரப் பவனி வரும் சீரான காட்சி காண
சிறப்புற வாழ்த்துகின்றோம்



தயா மரக்காலை
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(C4937)

இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகல விதமான றேடியோ, வீடியோ டெக், T.V ஆகியவற்றில் உதிரிப்பாகங்களை [வீடியோ Head I.C ரான்சிஸ்டர், அன்ரனா பூஸ்டர் ஆகியவற்றை] மலிவான விலையில் நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ள நாடுங்கள் R.V சென்ரர், F. 6 முதலாவது மாடி, நவீனசந்தை, யாழ்ப்பாணம். (4234)

எம்மிடம் ஹொண்டா, C50, C90 HAO 2, C90, MD70, MB 5, RACOON GS 125, [new brand] CB-250 எலக்ரோனிக் மோட்டார் சைக்கிள்கள், பல நிறங்களில் மொத்தமாக அல்லது சில்லறையாக பெற்றுக்கொள்ளலாம். கோயில் பொருட்களும், பித்தளை, செப்பு, அலுமினியம், எவர்சில்வர் பொருட்களும் விநியோகஸ்தர்கள். ஸம்ஸ் மெற்றல்ஸ்ரோர்ஸ் 26/B மானிப்பாய் வீதி, கிளை 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [4671]

சகல விதமான T.V றேடியோ, பூஸ்டர் அன்ரனா வயர் சுவர் சுடிசாரங்கள், கைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், சைனா மின் அடுப்புகள், T.V ஸ்ராண்ட் றைஸ் குக்கர் மற்றும் எலக்றிக் வயறிங் பொருட்கள், பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road Jaffna (C5482)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் மகாராஜா ஹோல்செற் நாஷனல் கறுப்பு வெள்ளை T.V கசற்றேடியோ, சாப்பாட்டு மேசை, கதிரை கட்டில் சியஸ்ரா மெத்தைகள் Oven சம்பளம் 12' x 8' சைஸ், Show case கண்ணாடிமேசை புத்தக அலுமாரி, சிறிய, பெரிய கபேட், Fan மற்றும் பல பொருட்களும் மிகமலிவு விலையில் உண்டு. M. தியாகராஜா 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக் சந்தியருகில்) (4458)

Indra Aqua வண்ண மீன்களும் கண்ணாடித் தொட்டிகளும், தொட்டி உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு A. C. ராஜக்கோன், 28 மத்திய மேற்கு வீதி (குருநகர் தண்ணீர்த் தாங்கிக்கு அருகாமை) குருநகர். (4482)

புதிய Reconditioned Honda, கார், புதிய பழைய Model C. 90 C. 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No 18, கண்டி வீதி, (உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக) யாழ்ப்பாணம். (4500)

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [4673]

## கோழிக்குஞ்சு

ஒருநாள் சேவல் பிறவுன், லேமன் பிறவுன் பெட்டைக்குஞ்சுகள் சேவல் குஞ்சுகள் 21-6-88 லும் 22-6-88 லும் விநியோகிக்கப்படும். கறுப்பு சேவற் குஞ்சுகள் 24-6-88 லும் 28-6-88 லும் விநியோகிக்கப்படும். விபரங்களுக்கு (1) R.S.K.Farm 'முருகபதி' [டச்சு றோட் பான்ஸ் பாடசாலைக்கு அருகாமை] உடுவில். (2) குபேரன்ஸ்ரோஸ் கொக்குவில் சந்தி கொக்குவில். 4679

ஒருநாள் Shetna Farm B 380 (Bab - Cock) பிறவுன் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சாவற் குஞ்சுகள் 28-7-88 விநியோகிக்கப்படும். 3 கிழமைக்கு முன் முற்பணம் செலுத்தி பதிவு செய்பவர்களுக்கு சேவற் குஞ்சுகள் விலை 6/75. விபரங்களுக்கு R.S.K Farm முருகபதி [டச்சு றோட் மான்ஸ் பாடசாலைக்கு அருகாமை] உடுவில் (2) குபேரன் ஸ்ரோஸ், கொக்குவில் சந்தி, கொக்குவில். (4680)

## வகுப்புகள்

ICMA/ AAT/ I. A. B/ Computer Programing வகுப்புகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன, School of Business Administration 16, 3ம் குறுக்குத் தெரு, [O.L.R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம் யாழ்ப்பாணம். (C5468)

## தொழிற்கல்வி

வெளிநாடுகளில் இலகுவில் தொழில்பெற Telex I.D.D. Operators (International) இருபாலாரும் Radio officer (ship) P. M. G Electronics Air-condition & Refrigeration Electrical wiring அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும் பதிவுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும். விபரங்களுக்கு Electronic Engineering Ken centre Ialaly Road, Thirunelvely. (4477)

## புதிய வெளியீடு

புதிய வெளியீடுகள் விற்பனையாகின்றது. 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் திறமைச் சித்தி பெற அரிய வழிகாட்டிப் பயிற்சியும் கட்டுரைகளும் அடங்கிய புதிய பதிப்பு கு.வி அச்சக வெளியீடு ஞானசுரபி புத்தகக் கம்பனி, யாழ்ப்பாணம். (C4965)

## வாடகைக்கு

இந்தியா சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமக்களின் அதிநவீன தலை சோடனை நகைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ள நாடுங்கள் கனகசபை தர்மகுலசிங்கம் "கணேஸ் வாசா, காரைநகர் மேற்கு வீதி' காரைநகர் முன் கூட்டியே ஓடர்களை தரவும்' (4658)

## தேவை

(யாழ்) நகரில் வியாபாரத்தில் ஆர்வமுள்ள அனுபவமுள்ள பெண்கள் Sales Girls ஆக கடமையாற்றத் தேவை. மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்ப முடிவுத் திகதி 24-06-88 C/o 241, உதயன் யாழ்ப்பாணம். (C/4912)

யாழ் நகரில் இயங்கும் பிரபல வியாபார ஸ்தாபனத்தின் கொழும்பு, வவுனியா, வடமராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கவுள்ள கிளை நிறுவனங்களிற்கு மனேஜர், லிகிதர், பெண்கள் தேவை. கல்வித் தகைமை G.C.E. A/L. விண்ணப்ப முடிவுத்திகதி 30. 6. 88 தொடர்பு: C/o 243, உதயன் யாழ்ப்பாணம். (4682)

### TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rdLane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### தேவை

பழைய செம்புபித்தளை அலுமினியம் உயர் விலைக்கு பெறப்படும். பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [4674]

### கலர்ப்படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்கிறோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P. C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள. கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (4910)

### மணப்பெண் தேவை

44 வயதுடைய விரிவுரையாளர், பொறியியலாளர், பங்காளர் ஆகியவருக்கு பிற்பால பராமரிப்புக்கு எற்ற 40 வயதுக்கு கீழ்ப்பட்ட தொல்லைகள் அற்ற பெண் தேவைப்படுகின்றது. விபரம் உள் புகைப்படம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கலாம் இருப்பிட தகவற்றை திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல. 164 C/o உதயன் யாழ்ப்பாணம். (4478)

எமது நேற்றைய

# புதிய வெளியீடுகள்

(1) ரஜனி - ராதா 'எங்கவீட்டு ராஜா'

(2) சாருஹாசன் - ஷீமா 'பழிவாங்கும் கார்'

(3) ரஜனி - ராதிகா 'புரட்சி வீரன்'

## தணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி 4913)

# Diploma in Computer Programming & DataProcessing Basic Language

6 MONTHS COURSE

வார நாட்களிலும் சனி, ஞாயிறு நாட்களிலும் இரு தனித் தனிப் பிரிவுகள்

தகைமையும் திறமையும் ஆற்றலும் அனுபவமும் மிக வாய்ந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்கள்

ஆரம்பம்:

வாரநாள் வகுப்புகள்: 23 - 06 - 1988 வியாழன்
சனி, ஞாயிறு வகுப்புகள்: 09 - 07 - 1988 சனி

**கட்டணம்: ரூபா 1500/-**

(தவணை முறையிலும் செலுத்தலாம்)

எமது குளிரூட்டப்பட்ட கொம்பியூட்டர் அறையில் அண்மையில் தருவிக்கப்பட்ட பல சிறப்பான நவீன கொம்பியூட்டர்களில் 60 மணித்தியாலங்களுக்குக் குறையாத செய்முறைப் பயிற்சியும் பயிற்சிமுடிவில் சித்தியெய்தும் மாணவர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்குகந்த சான்றிதழ்களும் வழங்கப்படும்.

CIMA, AAT, IAB வகுப்புகளும் சமீபத்தில்தான் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளிலும் இன்னும் சில தினங்களுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

# HARVARD INSTITUTE

SUCCESSORS OF

**Cantabia Institute**

(Pioneers in Computer Eudcation)
No. 21, Main Street,
JAFFNA.

### தேடுதலின்போது இளைஞர் காயம்

வவுனியாப்பகுதி பாமோட்டை பண்டாரிக்குளம் பகுதியில் சைக்கிளில் சென்ற காலை சுற்றி வளைத்த இந்திய அமைதிப் படையினர்ச் சந்தேகத்தின் பேரில் இளைஞர்களில் ஒருவரைக்கொண்டு சென்றனர்.

இத் தேடுதல் நடவடிக்கையின் போது ஐயாத்துரை சிவபாலன் (31) என்பவர் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சனிக்கிழமை மாலை அனுமதிக்கப்பட்டார்.

இவர் மாதர் பணிக்கர் மகிழங்குளம் அரசினர் பாடசாலையின் ஆசிரியராவார். இவருடன் வேறுபலரும் தாக்குதலுக்கு உள்ளானதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளையில் சாஸ்திரிகூழாங்குளம் சுந்தரங்குளம் கல்மடு ஆகிய பகுதிகளில் இரண்டாவது நாளாக சனிக்கிழமையும் இந்தியபடையினர் தேடுதல் நடத்தினர்.

வீடுகளில் இருந்தவர்களை வெளியேறச்செய்து விட்டு வீடு வீடாகத் தேடுதல் நடைபெற்றது. (ஒ - 164)

### பாக்கிரின் மெய்ப்பாதுகாவலர் காயம்

பாக்கிர் மாக்காரின் பாதுகாப்பு அதிகாரி துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் வைத்திருந்த ரைபிள் தற்செயலாக வெடித்ததைத் தொடர்ந்து அவர் காலில் காயமடைந்தார். [ஒ-எ] இ

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

# கம்பியூட்டர் கல்வி

## Computer Programming in Basic Language



புதிய பிரிவுகள் ஆரம்பம்:

சனி, ஞாயிறு வகுப்புகள்: 25-06-88 பயிற்சிக் காலம் 2 மாதம்
திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்: 01-07-88
பயிற்சிக் காலம்: 40 நாள்

கட்டணம்: 750/- மாத்திரம் (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I·B.M. (Compatable) கம்பியூட்டர்களில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால், விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 24-06-1988

# UNICO COMPUTER CENTRE

No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமையில்)

(C 5465)

# INDIAN EXAM

ஆங்கில மருத்துவ பட்டப்படிப்பு
L. M. M

இந்திய மத்திய அரசின் அனுமதி இல 4-6170 MPT, 24- 11- 1972 G. O
G. C. E O/L சித்தியடைந்த இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

இந்திய அரசினால் அனுமதிக்கப்பட்ட ஆங்கில வைத்திய டிப்ளோமா பயிற்சிகள் தபால் மூலம் ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல 10, பருத்தித்துறைவீதி,
யாழ்நகர் 4628

## அறிவித்தல்

1988-06-20 (திங்கட்கிழமை) உதயன் 6ஆம் பக்கத்தில் திருமதி சின்னத்தங்கம் ஆச்சிக்குட்டி அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவாஞ்சலியில் படம் தவறுதலாக மாறுபட்டதற்கு மன்னிப்பு கோருகிறோம்.

தகவல்
S. சிவசுப்பிரமணியம்.

4645

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
15-12-1936

மறைவு:
28-06-1986

திதி:
21-06-1988

**உயர்திரு. மு. சி. திருநாவுக்கரசு**

[B. sc (Ind.) Double Dip in Co-op (GERMANY) Justice of the peace and Coroner]

முன்னாள் தீவுப்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க சமாசம் காரியதரிசியும், ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரும், மீன் பிடி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்.

அன்பிற்கும் பண்பிற்கும் உதாரணமாக வாழ்ந்த அன்புத்தெய்வமே உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள்.

ஒழுவில் வீதி,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

# முதலாம் வருட நினைவஞ்சலி



செல்வி
**ராதாமணி கனக செந்திநாதன்**

பிறப்பு: 25 - 8 - 1959
அநியாய அழிப்பு: 21 - 6 - 1987
திதி: 8 - 7 - 88

புன் சிரிப்பு நெளியும் திருமுகத்தின் வனப்பும்
கள்ளமில்லாத உள்ளத்தின் தெளிவும்
உலகையே சொரியும் ஒளி வீசும் வாக்கும்
கபடமில்லாத சகாக்களின் கூட்டுறவும்
கண்டு களித்த எம் இதயம் கலந்த
செல்வமே ராதாமணியே
மின்னுமல் முழங்காமல் எங்களை
ஏங்க வைத்த பொல்லாத ஷெல்
வடிவில் வந்த
காலன் இரக்கமின்றி எம்மிடமிருந்து
பிரித்து ஆண்டு ஒன்று ஓடினாலும்
எங்கள் உள்ளத்தில் அழியாது
இருக்கு நின் ஒளி தரும் நினைவால்
கலங்கியே நிற்கும்

அம்மா, அக்காமார், அத்தான்மார், அண்ணா, அண்ணி, அவர் தம்பிள்ளைகளும்.
குரும்பசிட்டி,
தெல்லிப்பளை. (4633)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவில் ரதோற்சவ மலர்

21 - 06 - 1988


மாத்தனை கந்தனின்
அருளை நாடுகிறோம்

பெயின்ட், இரும்புச்சாமான்களுக்கு
**முருகன் றேடர்ஸ்**
21, Clock Tower Road,
Jaffna.

---

மாத்தனை கந்தனை
வாழ்த்துகிறோம்

தரமான இனிப்பு, பிஸ்கட், டொபி
வகைகளுக்கு
**ஒலிம்பிக் இண்டஸ்றீஸ்**
பொற்பதி றோட், கொக்குவில்.

---

மாத்தனைக் கந்தன்
அருள் புரிவாராக!

கோழிக்குஞ்சு, கோழித்தீன்
வகைகளுக்கு
**சற்குணம் பிறதர்ஸ்**
பிரம்படி லேன், கொக்குவில்,

---

மாத்தனை முருகா குறை திருமையா!

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான குத்தரிசி, பச்சை அரிசி, அரிசிமா மொத்தமாக, சில்லறையாக கிடைக்கும் இடம்:
பலசரக்கு, சாய்ப்பு பொருள்களுக்கு:
**சரஸ்வதி மில்-சரஸ்வதி ஸ்ரோர்ஸ்**
ஆடியபாதம் றோட், கொக்குவில்.

---

மாத்தனை முருகன்
அருள்புரிவாராக!
**யுனிக்கோ கொம்பியூட்டர் சென்ரர்**
இல: 5, பவர்ஹவுஸ் றோட்,
இரண்டாம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்
இலங்கை.

---

மாத்தனை முருகனைத் துதிப்போர்க்கு
வல்வினைபோம்!

மக்கள் இடர்தீர அருள்புரியும்
மாத்தனை முருகனடியே துணை
**செந்தில்ஸ்**
52, மணிக்கூட்டுவீதி, (225, ஸ்ரான்லிறோட்) யாழ்ப்பாணம்.
கிளை: சம்பியன் லேன், கொக்குவில்.

---

வண்ணமயில் ஏறிவரும்
மாத்தனைக் கந்தனை இறைஞ்சுகிறோம்
**இயந்திரம்ஸ்**
We undertake
* CRANKSHAFT GRINDING
* CYLINDER REBORYING
* LINE BORYING
* LATHE WORKS

**JANTHIRAM'S**
336, Clock Tower Road,
JAFFNA.

---

மாத்தனை முருகா
அருள் புரிவாராக!
சகலவிதமான பலசரக்குகளை மொத்தமாக, சில்லறையாக, மலிவாகப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்
**சண்முகா சேல்ஸ் சென்ரர்**
கே. கே. எஸ். வீதி,
குளப்பிட்டி, கொக்குவில்.

---

மயில் ஏறி வரும்
மாத்தனை முருகன்
அருளை நாடுகிறோம்

பாடசாலைப் பிள்ளைகள்
பாதுகாப்பாகச் சென்றுவர
**ரவி ஸ்கூல் சேவிஸ்**
சம்பியன் லேன்,
கொக்குவில்.


## தருக்கள் சூழ்ந்த தலத்திலே

## ஆறுமுகசுவாமியின் அருட்பவனி

அரசு, வேம்பு, மா, தென்னை என்னும் தருக்கள் சூழ்ந்த எழில் தரும் கோவில் கொக்குவிலில் விளங்கும் மாத்தனைக் கந்தசுவாமி கோவிலாகும். [illegible] கோவில் வாசலும், [illegible] பஞ்சாங்கத்தாலும் சிறப்புற விளங்குவது கொக்குவில் என்னும் கிராமம். இதில் அமைந்திருக்கும் மாத்தனைக் கந்தசுவாமி கோவில் "மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது" என்னும் ஆன்றோர் வாக்குக்கமைய விளங்குகின்றது. பக்தியும் அமைதியும் பொதுவாக நிலவும் இக்கோவிலில் இன்று தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

**வேலாயுதம்**

200 ஆண்டுகளுக்கு முன் ஒரு புளிய மரத்தடியிலிருந்த வேலாயுதம் காலப்போக்கில் கோவிலாகத் தோன்றியெழுந்தது. இவ்வேலாயுதத்தை வைத்து கோவில் கட்டுவித்ததாக அறிகிறோம்.

பல்லாண்டுகளாக இக்கோவிலில் அலங்காரத் திருவிழாக்களே நடைபெற்றன. 1942 இல் பிள்ளையார் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு அதன் கும்பாபிஷேகம் 1942 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. 1950 ஆம் ஆண்டு இங்கு முத்துக்குமாரசாமி விக்கிரகம் சேர்க்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இக்கோவில் பழுதடைந்தமையால் இங்கு திருப்பணிவேலைகள் செய்ய வேண்டியிருந்தது. 1962 இல் மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**கொடியேற்றம்**

அலங்காரத் திருவிழா நடைபெற்ற இவ்வாலயத்தில் 1967 ஆம் ஆண்டு முதல் கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகியது. ஆனி உத்தரத்திலே தீர்த்தத் திருவிழா நிகழக்கூடியதாக பல திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

1969 ஆம் ஆண்டு நடேசர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின்னர் ஆறுமுகசுவாமி விக்கிரகம் வைக்கப்பட்டது. இப்பொழுது தேர்த் திருவிழாவில் ஆறுமுகசாமி பவனி வருகின்றார்.

**உற்சவங்கள்**

இக்கோவில் நவராத்திரி, சிவராத்திரி, ஐப்பசி வெள்ளி உற்சவம், கந்தசஷ்டி, திருவெம்பாவை உற்சவம் ஆகிய உற்சவங்களையும், விசேட தினங்களில் விசேட பூசை என்பனவும் நடைபெற்று வருகின்றன.

பல்லாண்டுகளாக இக்கோவிலின் கர்ப்பக்கிருகத்தில் வேல்மட்டுமே இருந்தது. முருகமூர்த்தி (வள்ளியம்மை, தெய்வானை சமேதராக) 1981 ஆம் ஆண்டு தைமாதத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது நிறுவப்பட்டது. இதன் பின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் வேல்த் திருவிழா நடைபெறுகிறது. எழுந்தருளிப் பிள்ளையாரும் செய்யப்பட்டது.

1984 இல் புதிய வசந்தமண்டபமும், அதன்பின் ஆறுமுகசாமி மண்டபமும் கட்டப்பெற்று கோவில் சிறந்து விளங்குகிறது.

இவ்வருடம் பிள்ளையார் முன்மண்டபம் கட்டப்பெற்றது.

உற்சவகாலங்களிலும் சரி, ஏனைய காலங்களிலும் சரி கோவில் வீதிகள் புனிதமாய் இருப்பதைக் காணலாம். இளைஞர்கள் கோவில் திருப்பணிகளிலும் விசேட விழாக் காலங்களிலும் தங்களால் இயன்ற சரீர உதவிகளைச் செய்தும் வருதல் மிகவும் சிறப்புடையதாக இருக்கிறது.

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவில் ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. அதனையொட்டி இச்சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது.



கற்கண்டும் பாலும் மின்னும் கன்னலுடன் தேனுமெல்லாம்
கார்த்திகேயன் வடிவமுன்னே கசக்கத்தான் போகுதன்றோ
சொற்பொருளாய் நிற்பவனைச் சோதி மயமானவனைத்
துக்கமெலாந் தீர்ப்பவனைத் தொழுது நிதம் பாடிநிற்போம்

செந்தூரின் பெருமானைச் செந்தமிழின் களஞ்சியத்தைத்
தேவர் சிறைமீட்டவனைத் தெய்வயானை மணந்தவனைப்
புனங்காத்த வள்ளி மகிழ் பூரணனை வேலவனைப்
பொலிவுறவே கொக் குவிலிற் பூவெடுத்து வழிபடுவோம்

ஆறுபடை விடுடைய ஆறுமுகன் பெயர்பாடி
ஆறுதலும் அடைந்தினிதே அன்புயர வாழ்த்திடுவோம்
அகதிகளாய் சென்றவர்க்கோ அஞ்சலளித்தாண்டவனை
அமைதியுறு மாத்தனையில் அடிபணிந்து வணங்குவமே


ஓம் முருகா

தளபாட வகைகளைக் குறைந்த
விலையில் பெற்றுக் கொள்ளலாம்
**மொடேர்ண் பேர்ணிச்சர்**
79/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

மாத்தனை முருகப்பெருமானின்
திருவருளை நாடுகின்றோம்

சிறந்த முறையில்
நிறைந்த சேவை
**எஸ்.பி.எஸ். ட்ரான்போட்சேவிஸ்**
கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு
கொழும்பு அலுவலகம்: 112, டாம் வீதி, கொழும்பு - 12.
யாழ் அலுவலகம்: 27, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்,

---

மாத்தனை முருகனின்
அருளை இறைஞ்சும்
**கொக்குவில் ஊர்வாழ் மக்கள்**

---

தேர் ஏறிவரும்
மாத்தனை முருகப் பெருமானின்
திருவருளை இறைஞ்சுகின்றோம்

* உங்களுக்குப் பிடித்தமான சாரி, சட்டை வகைகள்
* இன்றைய இளைஞருக்கு ஏற்ற ஷேட்டிங், சூட்டிங் வகைகளுக்கு

சிறந்த ஸ்தாபனம்
**லிங்கம் சில்க் ஹவுஸ்**
18, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

---

முருகன் அருளை நாடுகின்றோம்
**ஏ.கே.எஸ். நகைமாளிகை**
68, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22519

---

கொக்குவில் மாத்தனை கந்தன்
அருளை இறைஞ்சுகிறோம்

கே. கே. இராசரத்தினம்
227, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

செந்தூரன் மலிசி சொப்
நாவடி மானிப்பாய் வீதி,
நாவடி.

---

மாத்தனை முருகப் பெருமானின்
திருவருளை இறைஞ்சுகின்றோம்
**ராஜ் போட்டோ,**
நந்தாவில்,
கொக்குவில்.

---

மாத்தனை கந்தனின்
அருளை நாடுகிறோம்

தங்க, வைர நகைகளை திருப்தியுடன் வாங்க
நாடுங்கள்
**ராணி ஆபரண மாளிகை**
63, கன்னாதிட்டி (R. G. பில்டிங்)
தொலைபேசி: 23540 யாழ்ப்பாணம்

---

மாத்தனை கந்தன்
அருளை நாடுகின்றோம்

தரமான தங்க, வைர நகைகள்
குறித்த தவணையில் சிறந்த
முறையில் செய்து கொடுக்கப்படும்
**கே. கே. வி**
**யாழ்ப்பாணம் நகைமாளிகை.**
82/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 021-22362

---

மாத்தனை முருகன்
அருளை நாடுகிறோம்

தரமான, புதிய மொடல்
தங்க நகைகளுக்கு நயம், நாணயம்
நிறைந்த ஸ்தாபனம்
தலைமையகம்: **ராத ஜுவலர்ஸ்** 131 (212) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: **U.P. ஜுவலர்ஸ்** 58, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய ரதோற்சவ சிறப்பிதழ்

21 - 06 - 1988

## உழுத வயலில் உதித்தெழுந்து கோயில் கொண்ட விநாயகர்

சீர்மிகு நம் ஈழத் திருநாட்டின் கண்ணே யாழ்ப்பாண நகரிற் கோண்டாவிற் கிராமத்தின் கிழக்குத் திசையிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றார் ஆசிமட அரசடி விநாயகப் பெருமான்.

### விக்கிரகம் கிடைத்த அதிசயம்

ஏறக்குறைய பதினெட்டாம் நூற்றாண்டளவில் கட்டப்பட்ட ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம் மிகவும் புதுமைகொண்டது.

இப்பொழுது இவ்வாலயம் அமைந்திருக்கும் பகுதியும் இதனைச்சுற்றியுள்ள கிராமங்களும் ஆதிகாலத்தில் வயல் நிலங்களாக இருந்தன. அக்காலத்தில் உழவர்கள் பயிர்ச் செய்கைக்காக ஏர்பூட்டி வயலை உழுதபொழுதுஓர் இடத்தில் இரத்தம் தோய்ந்த மண் தென்படக்கண்டார்கள். உழுத விவசாயிகள் பயந்து நடுநடுங்கி என்னவோ ஏதோ என்ற கிலி அவர்களை ஆட்கொள்ள, உழவை நிறுத்திவிட்டு இரத்தம் தோய்ந்த மண் தென்பட்ட இடத்தைத் தோண்டிப் பார்த்தார்கள். அந்த இடத்தில் விநாயகப் பெருமானின் முழு உருவிலான ஒரு விக்கிரகம் இருக்கக் காணப்பட்டது.

உடனே சுற்றுடல் உழவர்கள் எல்லாம் ஒன்று கூடி அதே இடத்தில் ஓர் ஓலையால் வேய்ந்த கொட்டில் கட்டி அத்தச்சிலையை மூலமூர்த்தியாகக்கொண்டு கோயில் அமைத்து விநாயகப் பெருமானுக்கு நிழல்மரமாக அரசம்கன்று ஒன்றையும் நாட்டி வைத்தார்கள்.

### ஆசிமடத்துப் பெண்கள்

அந்தக் கோயிலுக்குச் சொந்தமான ஆசிமடத்துப்பெண்கள் என்று சொல்லப்பட்ட இரு சகோதரிகள் அந்தக் கோயிலில் எழுந்தருளிய விநாயகப் பெருமானுக்குப் பூசை செய்து ஆதரித்துவந்தார்கள்.

அவர்களுக்குப் பின் ஏரம்புக் குருக்கள் என்பவரும் அவரைச் சார்ந்தவர்களும் பெருமானுக்குப் பூசை செய்து வழிபட்டு வந்தார்கள். எம் பெருமானுக்கு ஆசிமட அரசடி விநாயகர் என்னும் பெயரைச் சூட்டிய பெருமை அந்தக் காலத்தில் பூசித்துவந்த ஆசிமடப் பெண்களுக்கே உரியதாகும்.

### அடியார் கண்ட கனவு

உழவில் தென்பட்ட பொழுது விநாயகப் பெருமானுக்குப் பின்புறத்தில் (முதுகில்) ஏர் முட்டியகாயம் இன்றும் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆரம்பத்தில் ஓலைக் கொட்டிலாக இருந்து நாளடைவில் சுண்ணாம்புக் கட்டடமாக மாறிச் சிறியகோயிலாக அமைந்திருந்த வேளையில் விநாயகர் அடியார் ஒருவருக்கு கனவு ஒன்று தோன்றியது. சுண்ணாம்புக்கட்டடம் அமைந்திருக்கும் கோவிலைத் தான் இடிப்பதாக அவர் கனவு கண்டு, நடுநடுங்கி போய், மறுநாட் காலை விநாயகப் பெருமானை வணங்குவதற்கு ஓடோடிச் சென்றபொழுது கோவிலின் ஒரு பகுதி உண்மையாகவே இடிந்து கிடப்பதை அவர் நேரில் கண்டார்.

உடனே இது விநாயகரின் கட்டளை என ஏற்றுக்கொண்டு சுண்ணாம்புக் கட்டடம் அமைந்திருந்த கோவிலை முழுமையாக இடித்து விட்டு, கர்ப்பக்கிரகத்தையும் அர்த்த மண்டபத்தையும் கொண்டு அமைந்த கோவிலை அழகாகப் பொழிந்த கருங்கற்களினால் கட்டி முடித்து குடமுழுக்கும் செய்வித்தார். புத்திரபாக்கியம் இல்லாதிருந்த அவ்வடியாருக்கு விநாயகர் மக்கள் செல்வத்தைக் கொடுத்தருளினார் என்பது வரலாறு.

### மகாகும்பாபிஷேகம்

இதன்பின் மகா மண்டபம், திருத்த மண்டபம், என்பன அழகிய கற்களினால் கட்டப்பட்டு 1925 ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

எம் பெருமானுக்கு அலங்கார உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகையில் விநாயகர் அடியார்கள் மகோற்சவம் செய்ய வேண்டும் என்று எண்ணி ... பொருட்டுக் கொடித்தம்பமும் சித்திரத் தேரும், கட்டிச் சிறப்பாகச் செய்து முடிக்கத் திருவருள் பாலித்தது.

### தனித்தனி கோயில்கள்

இக்கோவிலில் மகாலட்சுமி வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் வேணுகோபாலர், சந்தான கோபாலர், வைரவர் ஆகியோர் தனித்தனியே கோயில்களில் எழுந்தருளச் செய்த பெருமை விநாயகர் அடியார்களுக்கே உரியதாகும். அழகில் நிறைந்த உற்சவ விநாயகர் மூவர், வள்ளி தெய்வானைசமேத சுப்பிரமணியர், சண்டேசுவரர் ஆகிய உற்சவ மூர்த்திகளும் எழுந்தருளி உள்ளனர்.

எம் பெருமானுக்கு ஆதியில் நிழல் கொடுத்த அரசமரம் தலவிருட்சமாகி இன்றும் நிழல் கொடுத்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.

### நன்னீர்

எம்பெருமானின் கோவிலைச்சுற்றி அமைந்திருக்கும் கிணறுகளில் உவர்நீர் கலந்திருந்தும், எம்பெருமானது திருமஞ்சனக் கிணறு மட்டும் நன்னீர் உள்ளதாக அமைந்திருப்பது புதுமையன்றோ!

எம்பெருமானது கோவிலைச் சுற்றியுள்ள உட்பிராகார நான்கு வீதிகளும் ஓடால் வேயப்பட்ட கூரையுடன் சிமெந்து போடப்பட்ட தளமுடனும் அழகிய திருவாயிலுடனும் முன் மண்டபத்துடன் காட்சி அளிக்கின்றன.

இவ்வாலயத்திற்கு வெளியே கிணறு ஒன்று அமைத்து, ஆனி உத்தரத் தினத்தில் எம்பெருமான் அந்தக் கிணற்று நீரில் தீர்த்தம் ஆடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்துள்ளது.

> கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று சிறப்பாக நடைபெறுவதை ஒட்டி இம்மலர் வெளியிடப்படுகிறது.
>
> கடந்த 13ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவங்கள் ஆரம்பமாகின. இன்று சித்திரத் தேரில் விநாயகர் பவனி. நாளை புதன்கிழமை ஆனி உத்தரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

ஆலய வீதியிலே முன்னர் உழவர்களினது இளைப்பாறும் மடம் என்று சொல்லப்பட்ட மடமும் திருத்தி அமைக்கப்பட்ட நிலையில் இருப்பதையும் இப்பொழுதும் காணலாம்.

### மகோற்சவம்

எம்பெருமானுக்கு ஆண்டு தோறும் ஆனி மாதத்தில் மகோற்சவம் நடைபெற்று ஆனி உத்தரதினத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறுகிறது.


மாதந்தோறும் சதுர்த்தி விழாவும், கார்த்திகை மாதத்தில் பிள்ளையார் கதை படிக்கப்பட்டு, பயன் சொல்லி, அடியார்கள் விரதம் அனுட்டித்து இருபத்தொரு நாளும் எம் பெருமானுக்கு அபிஷேகம் பூசை முதலியன விஷேசமாகச் செய்து இறுதி நாளன்று கஜமுக சூர சங்காரமும் விரத பூர்த்தியும் சிறப்பாக நிகழ்ந்து வருகிறது.

மேலும் மாதந்தோறும் பௌர்ணமி அன்று மகாலக்ஷ்மிக்கும் கார்த்திகை அன்று முருகப் பெருமானுக்கும் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. சித்திரை மாதத்தில் மகாகும்பாபிஷேக தினத்தில் சங்காபிஷேகமும் அன்னதானமும் தவறாது நடைபெற்று வருகிறது

### பரிபாலனசபை

விநாயகப் பெருமானின் சிறப்பும் பெருமையும் மிக்க இவ்வாலயத்தை அதிசிறப்புடன் பரிபாலிக்கும் நோக்கத்தோடு கிராமத்தவர்கள் ஒன்று கூடி 1959 ஆம் ஆண்டில் கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபை,, என்னும் பெயரைக் கொண்ட ஒரு பரிபாலன சபையை நிறுவினர்.

இச்சபையில் மகோற்சவ உபயகாரரும், விநாயகர் அடியார்களும் உறுப்பினராக இருந்து ஆலயத்தை இன்றுவரை அதிசிறப்புடன் பரிபாலித்து வருகின்றனர்.



### சித்திரத் தேர்

1974 ஆம் ஆண்டில் விநாயகப்பெருமானுக்கு இலட்சம்ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் ஓர் அழகிய சித்திரத்தேர் உருவாக்கி, விநாயகப் பெருமானைச் சித்திரத் தேரில் எழுந்தருளச் செய்து வீதிவலம் வரச் செய்த பெருமை எங்கள் கோண்டாவில் கிராம விநாயகர் அடியார்களுக்கே உரியதாகும்.

இதன் பின்னர் இவ்வாலயத்தில் மகாலக்ஷ்மி கோவில் இல்லாத குறையைப் போக்க எண்ணிய விநாயகர் அடியார்கள், 1977 ஆம் ஆண்டில் அழகிய மகாலக்ஷ்மியையும், வேணு கோபாலரையும், தனித்தனி கோயில்களில் பிரதிஷ்டை செய்து மூலஸ்தானத்திலும் சுற்றுப் பிராகாரத்திலும் உள்ள சகல கோவில்களின் திருப்பணி வேலைகளையும் சிறப்பாகச் செய்து மகா கும்பாபிஷேகம் செய்தனர் விநாயகர் அடியார்கள்.

### பொதுச் சொத்து

இக் கோவில் ஒரு பொதுச்சொத்து என்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் இல. 541 வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் கோவிலின் நிர்வாகத்தை முறையான பொதுச் சபையொன்று 07- 04- 1984ல் கூட்டி, ஆலய வழிபடுவோர் சங்கமொன்றை அமைத்து அதனிடம் ஒப்புவித்தனர். இச்சங்க உறுப்பினரின் இடையறா உழைப்பினால் கோவில் திருப்பணி வேலைகள் முக்கியமாக இராச கோபுரம்

(5 ஆம் பக்கம் பார்க்க)


விநாயகப் பெருமானின் சித்திரத் ★ தேர்ப்பணி ★
சிறப்புற வாழ்த்துகிறோம்
பல வண்ண சேலைகளும், நவீன புடவைகளும் நல்மான அன்பளிப்புப் பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
[ர]ங்குமரன் ஸ்ரோர்ஸ்
பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு.

பள்ளி மாணவர்களுக்கான புத்தகங்கள் பாடசாலை உபகரணங்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்கள், பரிசளிப்பு பொருட்களுக்கு நாடவேண்டிய இடம்
J. P. மல்ரி சொப்
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,

★ சகல விதமான பலசரக்கு
★ சாய்ப்பு சாமான்கள்
★ அன்பளிப்புப் பொருட்கள்
ஆகியவற்றை வாங்குவதற்கு
நாடுங்கள்:
இராசமணி ஸ்ரோர்ஸ்
கார்த்திகா ஸ்ரோர்ஸ்
ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ பல சரக்கு, கட்டிடப் பொருள்கள்
★ C. I. C பெயின்ற் வகைகள்
என்பவற்றை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
★ சிவா பிறதர்ஸ் ★
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

கோண்டாவில் விநாயகர் அருளை வேண்டி நிற்கிறோம்
★ சகலவிதமான மின்சார உபகரணங்கள்
★ எஸ்-லோன் பைப் வகைகள்
மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களின்
★ ரயர் ரியூப் வகைகளை நிதான விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
றட்ணம்ஸ்
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.

கோண்டாவில் விநாயகர் அருளை நாடுகிறோம்
★ சகலவிதமான பலசரக்குச் சாமான்கள்
★ சாய்ப்புச் சாமான்கள்
ஆகியவற்றை நிதான விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஜோதி ஸ்ரோர்ஸ்
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ அரிசி மா, மிளகாய்த்தூள்
★ தானியவகைகள்
போன்றவற்றை
● சுத்தமாகவும் ● சுகாதாரமாகவும்
கைதேர்ந்த ஊழியர்களைக் கொண்டு
— அரைத்துக் கொடுப்பவர்கள் —
எஸ். ரீ. எஸ். இண்டஸ்றீஸ் அன் மில்ஸ்
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

சகல விதமான பலசரக்கு சாமான்கள் சாய்ப்புச் சாமான்கள் ஆகியவற்றை நிதான விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
மகேந்திரன் ஸ்ரோர்ஸ்
நபாற் சுந்தோர் சந்தி,
கோண்டாவில் கிழக்கு.

ரதோற்சவம் இனிது நடைபெற அருள்பாலிப்பாய் விநாயகா
★ சகலவிதமான பலசரக்குச் சாமான்கள்
★ சாய்ப்புச் சாமான்கள்
★ விவசாயப் பொருட்கள்
என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்
திருநாவுக்கரசு அன் சன்ஸ்
பலாலிறோட், கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

விநாயகப் பெருமானின் ரதோற்சவ பவனி இனிது நடைபெற பிரார்த்திக்கின்றோம்.
பாமினி என்ஜினியர்ஸ் அன் கொன்டறக்ரர்ஸ்
கோண்டாவில் கிழக்கு.

எல்லாவிதமான பலசரக்கு சாமான்கள், சாய்ப்புச் சாமான்கள் ஆகியவற்றை நிதான விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
நாகேஸ்வரி ஸ்ரோர்ஸ்
ஆலடிச் சந்தி,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

சகலவிதமான பலசரக்கு மற்றும் சாய்ப்புச்சாமான்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்.
தவம் அன் சன்ஸ்
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

**பொருள்:**
தன் கடமை இன்னது என்று தெளிவாக அறிந்து அதைச் செய்வதற்கு ஏற்ற காலத்தை எதிர்நோக்கித் தக்க இடத்தையும் அறிந்து ஆராய்ந்து சொல்கின்றவனே தூதன்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல. 2 ??? வீதி, தொலைபேசி 24805, 22072
யாழ்ப்பாணம்
21-06-1988 க. பெ. இல. 22

## ஒரு கல்லில் இரு மாங்காய்!

பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்க்குப் பனம்பொருள் உற்பத்தி சார்ந்த திட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் பாராட்டத்தக்கதும், ஊக்குவிக்கப்படவேண்டியதுமான ஒன்றுமாகும்.

மன்னார் மாவட்டத்தில் பனை அபிவிருத்தியை மையமாகக்கொண்ட புனர் வாழ்வுத் திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் கொழும்பில் புனர்வாழ்வுத் திட்டங்களில் பனை அபிவிருத்தியையும் சேர்த்துக்கொள்வது சம்பந்தமான மாநாடு ஒன்று நடைபெற்றது.

தமிழ்ப்பகுதிகளில் இடம்பெறவுள்ள புனர்வாழ்வுப் பணிகளில் பனைவளத்தை எவ்வாறு பயன்படுத்தலாம்? இந்தச் சந்தர்ப்பத்தைத் தக்கபடி உபயோகித்து பனைவளத்தின் பூரண பொருளாதாரப் பெறுபேறுகளை ஈட்டவேண்டும். அதன்மூலம் வடக்கில் பனை ஆதாரப் பொருளியல் அமைப்பை உருவாக்க வேண்டும்.

இவ்வாறான பல ஆலோசனைகள் மாநாட்டில் முன்வைக்கப்பட்டன. நாட்டின் சிறந்த பொருளியல் நிபுணராக விளங்கியவரும், இப்போது சர்வதேச நிறுவனம் ஒன்றில் பொருளியல் நிபுணராகவும், ஆலோசகராகவும் பணிபுரிந்து வருபவருமான டாக்டர் பொன்னு விக்னராஜா பல அடிப்படைத் திட்டங்களையும் ஆலோசனைகளையும் மாநாட்டில் வழங்கினர் என அறியப்படுகிறது.

பனைவளத்தை ஆதாரமாகக்கொண்டு புனர்வாழ்வுத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவது இரட்டைப் பயன்தர வல்லது. ஒருகல்லில் இருமாங்காய்கள் பறிப்பதை ஒத்ததாகும். எங்கள் சொந்த மூலவளத்தை ஆதாரமாகக் கொண்டு செயற்படுத்தப்படும் புனர்வாழ்வு என்பதால் அதுநிரந்தரமாக நிலைத்து நிற்கவல்ல புனர்வாழ்வாக அமையும். அதேவேளை பனைவளத்தை எமது பொருளாதாரத்தின் முக்கிய உறுப்பாகக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை இலகுவாக அடையவும் முடியும். மறந்துபோன பனைவளத்தைத் தக்கபடி அபிவிருத்திசெய்து அதனைப் பரந்த மட்டத்திலான சமூக முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தவும் வாய்ப்பு உண்டாகும்.

எனவே புனர்வாழ்வுத் திட்டங்களில் பனைஅபிவிருத்திக்கு முக்கிய பங்கு என்ற கோட்பாடு வெறும் பேச்சளவிலும் எழுத்தளவிலும் இல்லாமல் செயல்வடிவம் எடுத்து நடைமுறையில் வரவேண்டும். அதனைத் தமிழர் தேசிய பொருளாதாரக் கோட்பாடாகக் கொண்டு சகல தரப்பிலும் முக்கியத்துவம் தரப்படுதலும் அவசியம்.

பனை அபிவிருத்திச்சபை மட்டும்தான் இதனைச் செய்யவேண்டும், அக்கறை காட்டவேண்டும் என்ற நிலை இருத்தலாகாது. புனர்வாழ்வுப்பணியில் ஈடுபடும் சகல தரப்பாரும் பனை அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து எமது பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம், யாழ். அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் என்பன இதுவிடயத்தில் முன்னுதாரணமாக நடந்துள்ளதைப் பாராட்டுகிறோம்.

பனையை ஒரு பெருந்தோட்டப் பயிராக்குவோமானல் அதனல் பரந்த சமூகமட்டத்தில் பொருளாதார விருத்தி காணலாம் என்பது மட்டும் நிச்சயம்.

# போட்டி ஆப்கன் அரசு அமைப்பு; இஸ்லாமபாத்தில் அறிவிப்பு

இஸ்லாமபாத், ஜூன்20
போட்டி ஆப்கன் அரசு அமைக்கப்பட்டது.

டாக்டர் நஜிபுல்லா தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசுக்குப்போட்டியாக இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டிருப்பதாக ஏழு கட்சி கம்யூனிஸ் எதிர்ப்புக் கூட்டணித் தலைவர் அகமதுஷா இஸ்லாமபாத்தில்நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றில் இதனை கூறி அவர் அறிவித்தார்.

போட்டி அரசாங்கத்தின் ஜனாதிபதியாக அகமதுஷா இருப்பார்.

2 உப ஜனாதிபதிகள், 12 அமைச்சர்கள் போட்டி அரசில் பணியாற்ற நியமிக்கப்பட்டனர்.

கொரில்லா இயக்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளார்களா என்பது வெளியிடப்படவில்லை.

ஆனல் லண்டனில் உள்ள ஆப்கன் அகதி ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

போட்டி அரசு இஸ்லாமபாத்தில் இருந்து இயங்குமா? அல்லது ஆப்கனிஸ்தானில் இருந்து இயங்குமா? என்பதும் அறிவிக்கப்படவில்லை. சோவியத் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லாவிடம் இருந்து அரசுப் பொறுப்பை ஏற்பதே போட்டி அரசின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

தனது தேசிய இணக்கத்துக்கான அமைச்சரவையில் சேர்ந்து கொள்ளும்படி டாக்டர் நஜிபுல்லா விடுத்த அழைப்பை போட்டி அரசு அமைத்த அகமதுஷா நிராகரித்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

## கெரில்லாத் தாக்குதல்

கொலம்பியா, ஜூன்.20
கொலம்பியாவின் தென்மேற்குப் பட்டினமான சூபியாவில் உள்ள பொலிஸ் கட்டம் ஒன்றை இடது சாரிக் கெரிலாக்கள் குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்கியது.

அப்போது ஏற்பட்ட மோதலில் 4 பொலிஸார் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## கரிபியன் தீவில் இராணுவப் புரட்சி!

போர்ட் ஒபிரின்ஸ், ஜூன் 20
கரிபியன் தீவான ஹெய்தியில் இராணுவப் புரட்சி நடந்த ஞாயிறு இரவு இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி லெஸ்லி மனிகற் என்பவரினல் கடந்த வாரம் பதவி நீக்கஞ் செய்யப்பட்ட இராணுவத் தளபதி ஹென்றி நம்பியன் ஆதரவாளர்கள் இப் புரட்சியை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

பதவி நீக்கஞ் செய்யப்பட்ட பின்னர் சிறை வைக்கப்பட்ட இராணுவத் தளபதி நம்பி தப்பி விட்டார் என்றும் அவரின் ஆதரவு படைகள் ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றி விட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மனிகற்றின் கதி என்ன என்பது தெரியவில்லை.

முதலில் சிறை வைக்கப்பட்ட ஜெனரல் நம்பியை விடுத்த பின்னரே அவரின் ஆதரவுப் படைகள் ஜனாதிபதி மாளிகை மீது தாக்குதல் நடத்தியது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## ஒருபுறம் நாகம் மறுபுறம் வேடன் இடையிலே....

ஹனோய் ஜூன் 20
கடற் கொள்ளைக்காரர்களுக்கும் தாய்லாந்து பாதுகாப்புப்படையினருக்கும் இடையே நடைபெறும் மோதலில் வியட்னும் அகதிகள் உயிரிழப்பதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

வியற்னுமில் இருந்து படகுகள் மூலம் அகதிகள் ஹொங் கொங் செல்கிருர்கள்.

அச்சமயம் கடற் கொள்ளைக்காரர்கள் மீது தாய்லாந்து படையினர் நடத்தும் துப்பாக்கிப் பிரயோகத்தில் அகதிகள் செல்லும் படகுகளும் சிக்கி விடுகின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று சிக்கியதில் 40 வியட்னும் அகதிகள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அப்படகில் அச்சமயம் சுமார் 80 அகதிகள் இருந்தனராம்.

அகதிகள் உயிரிழப்பது பற்றிய செய்திகள் மிகைப்படுத்தப்பட்டவை என்று தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

## அடையாளங் காணப்பட்டார்

அங்காரா ஜூன் 20
துருக்கிப் பிரதமர்ஓஸாலைக்கொல்ல முயற்சித்தவர், ஒரு வலதுசாரி தீவிரவாதி என்று அடையாளங் காணப்பட்டது.

அங்காராவில் ஆளும் கட்சியின் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது பிரதமர் மீது இரண்டு முறை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. தெரிந்ததே (எ)

## புதுடில்லியில் பாதுகாப்பு தீவிரம்

புதுடில்லி, ஜூன் 20
புதுடில்லியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு உள்ளது.

குருஷேத்திரத்தில் நேற்றுக்காலை இடம் பெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்தே மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது.

அநாதரவாக வீதிகளில் காணப்படும் பார்சல்களைத் தொடவேண்டாம் என்று பொது மக்களை மத்திய அரசு கேட்டுள்ளது. (ஒ-எ)

**வெளி உலகில்**

## அமெ.சண்டை விமானங்கள்

வாஷிங்டன், ஜூன்.2)
தவைத்துக்கு நவீன சண்டை விமானங்கள், ஏவுகணைகளை விநியோகிக்க அமெரிக்கா முன் வந்துள்ளது.

ஈரானின் தாக்குதலைச் சமாளிக்கவே குவைத்துக்கு அவை வழங்கப்படும்என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் அறிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் 640 ஏவுகணைகள், 40 எப்-18 ரக சண்டை விமானங்கள் குவைத்துக்கு அமெரிக்கா வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி 190 கோடி டாலராகும். (எ)

சமாதானத்துக்காகப் பிரார்த்திக்கலாம் ஆனல்

# தமிழ்மக்களின் உணர்வுகள் மழுங்கடிக்கப்படக்கூடாது

## மெதடிஸ்த கூட்டத்தில் ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூன்.21
மெதடிஸ்த திருச்சபையைப் பொறுத்த வரையில் அவர்கள் சமாதானத்துக்காக தொடர்ந்தும் பிரார்த்திக்கலாம். அதே சமயம் தமிழ் மக்களின் உணர்வுகள் மழுங்கடிக்கப்படாது பார்த்துக் கொள்ளுதலும் வேண்டும்.

மெதடிஸ்த திருச்சபையின் வருடாந்த இணைப்புக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். மாநகர ஆணையாளர் சி. வி. கே. சிவஞானம் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் சென்பீற்றர்ஸ் ஆலயத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நாம் ஒரு குறுக்குப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம்.

எங்கள் பாதையில் போகமுடியாமல் எங்கள் தலைவிதியை வேறு ஒருவர் நிர்ணயிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

நான் வன்முறையை வியாக்கியானம் செய்யவில்லை, ஆனல் இந்த ஆயுதங்கள், அஹிம்சை முறைகள் தோற்றுப் போன கட்டத்தில் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் தேவைக்காக எடுக்கப்பட்டன என்று சகல போராளி அமைப்புக்களும் கூறுகின்றன.

உண்மையான சமாதானத்தையே நாம் எல்லோரும் விரும்புகிறோம்.

அப்படி ஒரு சமாதானத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி, ஒப்புக்கொண்டபடி ஆயுதங்களை கீழே வைக்கும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு திரு. சிவஞானம் கூறினர்.

மேற்படி கூட்டத்தில் வடக்கு கிழக்கு மெதடிஸ்த சபை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

வண. பிதா ஜெயசிலன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

யாழ். சென் பீற்றர்ஸ் ஆலயக்குரு அருள் திரு. கோவிந்தராஜ் கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (இ--10)

## நூல்நிலையம் அலுவலகம் திறப்பு விழா

மண்டைதீவுஜூன் 21
திருநெல்வேலி சிறுவர் நிறைவாழ்வு இல்ல நூல்நிலையமும் அலுவலகமும் கொண்ட புதிய கட்டடத்தை இன்று 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நோர்வே லயன் கழகப்பிரதிநிதி லயன் ரேவர்ே ராம்சம்பிரதயா முறைப்படி திறந்து வைப்பார்.

இப் புதிய கட்டடத்துக்குரிய நிதியை நோர்வே லயன்கிளப் வட்டுக்கோட்டை லயன்ஸ்கிளப் ஊடாக அன்பளிப்பாக வழங்கியது. (இல-88)

## காணமற்போன சிறுவன் கண்டுபிடிக்கப்பட்டான்!

யாழ்ப்பாணம், ஜூன் 21
கைதடி அனைதைச் சிறுவர் இல்லத்திலிருந்து காணமல் போன சிறுவன் கண்டு பிடிக்கப்பட்டான்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

சில தினங்களுக்கு முன் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அழுதுகொண்டிருந்த பிரஸ்தாப சிறுவனை அதே வீதியில் வசித்த ஒருவர் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று தங்க வைத்தார்.

உறவினர் விவரம் விசாரித்ததில் சிறுவன் அதுபற்றி தனக்கு எதுவும் தெரியாததெனக் கூறினனும்.

ஞாயிறு "உதயன்" பத்திரிகையில் வெளியான செய்தியை அடுத்து குறிப்பிட்ட நபர் சிறுவனை கைதடி அனைதைச் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்க முற்பட்டார். ஆனல் மீண்டும் சிறுவன் தலைமறைவாகிஇருந்தான்.

தொடர்ந்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு, தேடப்பட்டதை அடுத்து ஞாயிறு மாலை யாழ். பஸ் நிலையத்தில் சிறுவன் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டான்.

## திருமந்திரத்தில் விஞ்ஞானக் கருத்துகள்

### திருமந்திரச் செம்மல் உரை

யாழ்ப்பாணம் ஜூன் 21
உலக சிருஷ்டி, பிரபஞ்சத் தோற்றம், வான சாஸ்திரம் பற்றிய விஞ்ஞானக் கருத்துக்கள் திருமந்திரத்தில் உள்ளது.

திருமந்திரச் செம்மல் எஸ். இராமநாதன் முன் கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கந்தர் மடத்தில் உள்ள தெய்விகத் திருக்குறள் இளைஞர் மன்றப் பணிமனையில் திருமந்திர விரிவுரைகளை திருமந்திரச் செம்மல் இராமநாதன் நிகழ்த்தி வருகின்றர்.

இத்தொண்டரின் அங்குரார்ப்பண விழாவில் பேசியபோதுதான் அவர் முன்கண்டவாறு குறிப்பிட்டார்:

தலைமையுரையில் மன்றத் தலைவர் திரு. என். யோகநாதன் சொன்னதாவது;

திருக்குறள், திருவாசகம், திருமந்திரம் ஆகிய நூல்களே தமிழ்மொழிக்கு அழியாப் புகழைத் தேடித் தந்துள்ளன.

தமிழர் பண்பாட்டின் உயிராக திருக்குறள், இருதயமாக திருவாசகம் ஆத்மாவாக திருமந்திரம் ஆகியன இருக்கின்றன.

இச்சோதனைக் காலத்தில் திருமூலரின் போதனைகளை அனுஷ்டித்து சாதனை புரிந்தால் வேதனைகள் அகலும்.

**சமய சந்நிதிகளில்**

## நிக்குளிப்பு வைபவம்

வேலணை, ஜூன் 21
மண்டைதீவு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவமும் தீக்குளித்தல் வைபவமும் இம் மாதம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு வழமை போல் நடைபெறும்.

இந்த உற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் அம்பாள் ஊர் சுற்றுலா இம் மாதம் 24 ஆம் திகதி மாலை நடைபெறும்.

அண்மையில் புனருத்தாரணம் செய்யப்பட்ட இந்த ஆலயத்தின் குடமுழுக்கு விழா நாளை 22 ஆம் திகதி நண்பகல் நடைபெறவிருக்கிறது. (இ-167)

## சாரணர் சின்னம் சூட்டு விழா

சுதுமலைவடக்குதமிழ்க் கலவன் வித்தியாலயத்தில்இன்று காலைசாரணர் சின்னம் சூட்டும் விழா நடை பெறுகிறது.

விழாவில் சாரணர் ஆணையாளர் திரு. த. போஜன் பிரதம விருந்தினராகவும் கல்வி அதிகாரி திரு. ச. குலஞ்செயன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளஇருக்கிருர்கள். (இ)

மத்தியமாகாணமுதலமைச்சர் நியமனம்

# ஏமாற்றம் அடையவில்லை என்கிருர் தொண்டமான்

கொழும்பு ஜூன் 21
மத்திய மாகாண முதலமைச்சர் நியமனம் பற்றிய எமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது பற்றி நான் ஏமாற்றமடையவில்லை.

இ. தொ. கா தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் முன் கண்டவாறு தெரிவித்தார்.

நான் என்றும் ஏமாற்றமடைபவன் அல்லன். நான் என்றும் நல்லது நடக்கும் என்று நினைப்பன். இல்லாவிடில் வாழ்க்கையில் வெற்றியைக் காண முடியாது.

கேள்வி: மத்திய மாகாண முதலமைச்சர் பதவி இ.தொ.காவுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கையை ஏன் விடுத்திர்கள்?

தொண்டமான்:
இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் நோக்கங்களின் அடிப்படையில் நான் செயல்பட்டேன். அரசு தனது நல்லெண்ணத்தைக் காட்ட இது நல்ல வாய்ப்பு என்று நான் எண்ணினேன்.

எந்த உடன்பாடும் செயற்படுத்தப்படும் கட்டம் வரும் போது சில கட்டுப்பாடுகள் உருவாகின்றன.

உடன்பாடு அமுல் நடத்தப்படுவதைப் பார்த்துக் கொள்ள போதுமான பலம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இருக்க வேண்டும்; இல்லாவிடில் உடன்பாடு வெறும் கடதாசியில் தான் இருக்கும்.

—இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னர். (இ-எ)

## மாணவர் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 21
அரசு எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டதாகக் கூறி சுமார் 150 மாணவர் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சுமார் 50 பாடசாலைகளில் கல்வி கற்று வந்த மாணவர்களே இப்படி இடை நிறுத்தம் செய்யப்பட்டனர் என்று கல்வி அமைச்சுச் செயலாளர் ஈ. எல். விஜேமான தெரிவித்தார்.

மாத்தறை, தங்காலை, மொனருகலை, பதுளை, கண்டி மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில், இடை நிறுத்தம் செய்யப்பட்ட மாணவர் படித்து வந்தனர் என்றும் அவர் சொன்னர். (ஒ-எ)

## உழுதல்....

(1-ம்பக்கத்தொடர்ச்சி)
அமைப்பு வளர்ந்தது இராசகோபுரம் இன்னும் பூர்த்தியாக இருவு ருவச் சிலைகள் (சிற்பங்கள்) பாத்திரம் அமைக்க வேண்டியுள்ளது.

**நம்பிக்கைச்சபை**

தொடர்ந்தும், பல பணிகள் செய்யப்பட விருப்பதனுல் ஆலய வழிபடுவோர் சங்கத்தினர் கடந்த 28- 06- 1988ல் ஆலய முன்றலில் கூடினர். இவ்வாலய நிர்வாகத்தை, நடைமுறைப் படுத்துவது அடுத்து வரும் பணிகள் குறித்து திட்டமிடுதல் ஆகிய சகல பொறுப்புக்களையும் வழிபடுவோர் சங்க அங்கத்தவர்களில் ஐவர் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (Board of Trustees) ஒன்றைநிறுவி அதனிடம் கையளித்துள்ளனர்.

இச்சபையில் திருவாளர்கள் த. இ. பாலசுந்தரம் (தலைவர்) க. சுந்தரலிங்கம் (செயலாளர்) இ. குலசிங்கம் (பொருளாளர்) க. வைரவநாதன், க. யோகேஸ்வரன் ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.

28-05-1988 இல் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்திற்கு யாழ். உதவி அரச அதிபர் திரு. ச. பொ. பாலசிங்கமும் இந்து சமய விவகார உதவிப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்) திரு. சி. சிவதாசனும் பங்குபற்றி சொற்பொழிவாற்றினர்.

★

வன்செயல்களினல்

# வடக்கு, கிழக்கு தொலைத்தொடர்பு பகுதிக்கு ரூபா 95 கோடி சேதம்!

கொழும்பு, ஜூன் 21
வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள தொலைத்தொடர்பு சாதனங்கள், நிலையங்களுக்கு கடந்தகால வன்செயல்களினல் ஏற்பட்ட சேதங்கள் 95 கோடி ரூபா. என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் புனரமைப்புக்குத் தேவையான பணத்தின் ஒருபகுதியைத் தர உலகவங்கி சம்மதித்துள்ளது. எஞ்சிய பணத்தை டென்மார்க் அரசு தந்து உதவும்.

இத்தகவலைத் தொலைத்தொடர்புத் திணைக்கள இயக்குநர் திரு. எம். பி. ரொட்ரிக்கோ தெரிவித்தார்.

டென்மார்க் தூதுக்குழு அண்மையில் இலங்கை வந்து பேச்சுக்களை நடத்திவிட்டுச் சென்றது.

மீண்டும் டென்மார்க் குழு வர உள்ளது.

அதன்பின்னர் திருத்த வேலைகளுக்கு டெண்டர் கோரப்படும். இது ஆகக் குறைந்தது ஒரு வருடம் எடுக்கும் என்று இயக்குநர் ரொட்ரிகோ தெரிவித்தார். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 89 வெப்ப இரசாயனம்

பிரிவு: III ஆரம்பமாகிவிட்டது

Sat. Sun : 4. 00 p. m.

ஆசிரியர்:

திரு. நாகரெட்ணம் (B. sc.)

மணல்தரை லேன், கந்தர்மடம்.



# உதயன்

21 - 06 - 1988 செவ்வாய்க்கிழமை



A/L 89 விஞ்ஞான மாணவர்கட்கு

வெப்ப இரசாயனம்

★ ஆரம்பமாகிவிட்டது ★

பிரிவு: I Sat, Sun 10-30 a.m

பிரிவு: II ஆரம்பம்: 19-06-1988

Sat, Sun: 1-50-p.m.

3-ஆம் குறுக்குத் தெரு, — யாழ்ப்பாணம்



## VACANCY

FOR THE POST OF

### Assistant Manager

Wanted an assistant manager with thorough knowledge in English. Previous experience in management and living in surrounding the Municipal area is preferable. Apply with all documents and with two refrees.

Salary: Negotiable

Age: 35 - 50 yrs

Closing date: 24-06-1988

Apply to: C/o. 242, UTHAYAN

(C4914)


## கடல்வலயச்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

னர்.

இதனால் மீன்பிடித் துறை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் தொழில் இழந்து, பொருளாதார வளம் குன்றி பட்டினிச் சாவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

மாணவர்கள் சுதந்திரமாகவும், சுயமாகவும் கல்வி கற்கமுடியாத நிலையில் உள உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலை மாற பின்வரும் கோரிக்கைகளை முன் வைத்து இன்று பூரண பகிஷ்கரிப்பும், மாபெரும் ஊர்வலமும் நடைபெற உள்ளன:-

★ மீனவர்கள்மீதான சகல கட்டுப் பாடுகளையும் தளர்த்தி இரவிலும் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். கடல் வலயச் சட்டம் நீக்கப்படும் வரை சகலருக்கும் ஸ்ரீ லங்கா அரசினால் வழங்கப் பட்டது போன்று பூரண நிவாரணம்வழங்கப்படவேண்டும்.

★ தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்படுத்த வேண்டும்.

★ சகல தமிழர்அமைப்புக்களும், பிரதிநிதிகளும் [illegible] வது [illegible] தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை [illegible] நடத்தி உறுதியான தொரு [illegible] தீர்வு [illegible] வேண்டும். இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-க-10)


## FOR SALE

Eleven lachams of land with new house (vacant) along Dutch Road, Uduvil for immediate sale. Offers to be made

C/o. 163, Uthayan Jaffna.

(4470)


## மிரட்டலுக்கு மத்தியிலும் நடத்தப்பட்ட பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ் பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வருட மருத்துவபீட மாணவர்களுக்கான மீள் பரீட்சையை நடத்த வேண்டாமென மிரட்டல் கடிதங்கள் வந்தபோதும் பரீட்சை திட்டமிட்டபடி நடத்தப்பட்டது.

இது குறித்து தெரியவருவதாவது:-

இரண்டாம் வருட மருத்துவபீட மாணவர்களுக்கான பரீட்சை அண்மையில் நடைபெற்றது. இப்பரீட்சையில் உரிய புள்ளிகளை பெறத் தவறியமாணவர்களுக்கு நேற்று மீள் பரீட்சை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில் இப்பரீட்சையை நடத்த வேண்டாம் எனவும். மீறி நடத்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படும். மிரட்டல் [illegible] டிதங்கள் மருத்துவபீட பேராசிரியர்களுக்கும் மருத்துவபீட துணை பீடாதிபதிக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

இந்த விடயம் பற்றி ஆராய்வதற்காக பேராசிரியர்களின் கூட்டம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கூட்டத்திற்கு மருத்துவ பீட மாணவர் மன்றத்தினர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர்.

அக்கடிதத்தில் "அனுமதேய மிரட்டல் கடிதங்கள் அர்த்தமற்றவை. எனவே பரீட்சையை நடத்தவும்" எனக் கேட்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து நேற்றுப் பரீட்சை திட்டமிட்டபடி நடத்தப்பட்டது.

பரீட்சைக்கு தோற்ற வேண்டியவர்களில் ஒரு மாணவனைத்தவிர மற்றைய அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டனர். (உ - 5)

## தமிழகத்தில் ராஜீவ்

பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று பகல் தர்மபுரி சென்றார். அங்கு அவர் பல பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

பின்னர் மாலை ஈரோடு சென்றார். அங்கு அவருக்குக் குதூகல வரவேற்பளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## பயங்கரவாத..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி பேசினார். (இ-எ)

## புதிர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்த போதே அமைச்சர் தொண்டமான் இப்படிச் சொன்னார்.

இன்றைய காலகட்டத்தில் சில முடிவுகளை முன்கூட்டியே எடுப்பது புத்திசாலித்தனமல்ல என்றும் திரு. தொண்டமான் சொன்னார்.

(ஓ-எ)

## மனித...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

காணாமற்போனவர்களின் நிலை பற்றியும்—

பழியுணர்ச்சி காரணமாக அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுவதாக வந்துள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றியும் விசாரணை நடத்துவதற்காக நடுநிலையான விசாரணைக் குழு ஒன்று ஏற்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—இப்படித் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## வீதித்தடை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. வாகனங்கள் மீது கற்களும் வீசப்பட்டன.

இதனால் பொலீஸ் வாகனத்தின் சாரதி தலையில் காயமடைந்தார்.

கற்களை வீசவேண்டாம் என்று மாணவர்களைப் பொலிஸார் கேட்டுக் கொண்டனர்.

தொடர்ந்து கற்கள் வீசப்படவே இருதரப்பினரும் மோதலில் ஈடுபட்டனர். அச்சமயம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் எம். ஜெயவர்த்தன என்ற மாணவன் உயிரிழந்தான் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## மாணவர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அமைதிப்படை இங்கு வந்ததோடு தளர்த்தப்பட, சட்டமும் தளர்த்தப்பட்டது.

ஆனால் ஒரிரு மாதங்கள் கழியுமுன்னரே அதே சட்டம் இந்திய அமைதி காக்கும் படையினரால் மீண்டும் கொண்டு வரப்பட்டது; நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இந்நிலை பல மாதங்களாக நீடிக்கவே ஏழை மீனவர்கள் பட்டினிச் சாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இச் கொடுமை பற்றி உரிய அதிகாரிகளிடம் பலமுறை எடுத்துச் சொல்லியும் அவை பயனளிக்கவில்லை.

ஆகவே ஊர்வலமும் பகிஷ்கரிப்பும் நடத்தத் திட்டமிட்டிருக்கும் மீனவ சங்கங்களுக்கு அனைவரையும் ஆதரவு நல்கும்படி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு வேண்டுகின்றது.

இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ-க-160)


## மரண அறிவித்தல்கள்

### தளையசிங்கம்

(இளைப்பாறிய Agriculture Instructer)

தளையசிங்கம் [யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதி), இளைப்பாறிய Agriculture Instructer காலமானார்.

— இவர் சுப்பையா சின்னம்மாவின் மகனும், காலம்சென்ற அப்போதிக்கரி வீரசிங்கம், நாகரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரரும், Dr. சரவணபவன் [அரசினர் வைத்தியசாலை பொலனறுவ], ஈஸ்வரன் [சுவிற்ஸசலாந்து], ஈஸ்வரி, சிவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி [சங்கீத ஆசிரியை ஒமந்தை மகா வித்தியாலயம்], செல்வலிங்கம், அன்னபூரணம், திலகவதி ஆகியோரின் சிறிய தகப்பனும், சிவகுமாரன் [இளைப்பாறிய லக்சல முகாமையாளர்], அருள்மயம், திருமதி L. K. விஜயரட்ண [டாக்டர் அரசினர் வைத்தியசாலை கிங்கிரகொட,] சிதம்பரநடராஜா [உஷா கொம்பனி], சபாரத்தினம் ஆகியோரின் மாமனும், மதுபாஷினி, நாரதசங்கற்ப வீரசிங்கா; அஜந்தன், றம்மியா ஆகியோரின் பேரனும், இரத்தினேஸ்வரி. மீனாச்சி (காலம் சென்றவர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இவரது ஈமக் கிரிகை வட்டுக்கோட்டை மேற்கில் வீரசிங்கம் 'ஈஸ்வர வாசா' இல்லத்தில் இன்றுகாலை செவ்வாய்க்கிழமை நடைபெற்று, தகனத்திற்காக கொத்துத்துறை இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: திருமதி இரத்தினேஸ்வரி வீரசிங்கம்

[4641]

### சரஸ்வதி கணேசன்

சுதுமலை மேற்கு, மானிப்பாயைச் சேர்ந்த சரஸ்வதி கணேசன் காலமானார். இவர் (காணி அபிவிருத்தி இலாகாவிலிருந்து இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பதிகாரி) வே. கணேசனின் அருமை மனைவியும், இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் தாயாரும், தி. செல்வரத்தினம், மு. இராஜேந்திரம் (சவுதி அரேபியா), காலம்சென்ற நடராசா குமாரசாமி (C.W.E. யாழ்.) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற ஐயாத்துரை, வல்லிபுரம், இரத்தினம் ஆகியோரின் சகோதரியும், தாக்ஷாயினியின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (21-6-1988) காலை 10மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

தகவல் தருபவர் அன்பு மருமகன்

[4506] ஐ. குமாரசாமி

### திரு. செல்லத்துரை இராமதாஸ்

யாழ்ப்பாணம் இல 68, பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த செல்லத்துரை இராமதாஸ் அவர்கள் 19-6-88 அன்றுகாலமானார். இவர் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னமலரின் அன்புக் கணவரும், திருமதி ராஜேஸ்வரி சிறீதரன், மங்களேஸ்வரி (யாழ். மருத்துவக் கல்லூரி), சபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ந. சிறீதரன் (மக்கள் வங்கி, மன்னார்) அன்பு மாமனும் திருமதி பராராஜசிங்கம் என்பவரின் அன்புத் தம்பியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 21-6-88 செவ்வாய்க்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று 10 மணியளவில் தகனக் கிரிகைகளுக்காக வில்லூண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்

ந. சிறீதரன்

(4642)



## அஞ்சலி

### இராஜரெட்ணம் வெற்றிவேலுப்பிள்ளை யோகேஸ்வரன்

இறைவன் அன்பால் கவரப்பட்டவர்களே இளம் வயதில் இறக்கிறார்களென்ற எழுத்தாளனின் கூற்று, நல்லவர்களே முதலில் இறக்கிறார்கள். வறண்ட இதயமுடையவர்கள் கோடைப் புழுதி மாதிரி எரிந்துபோகிறார்கள் என்ற ஆங்கிலப் புலவர் வோட்வேத்தின் கூற்றுக்குச் சமமானது.

என்றும் இளமையுள்ள யோகேஸ்வரன் இப்பூவுலகிலே பிரகாசமடையவிடாமல் மிக விரைவிலேயே காலனின் கொடூரமான கைகளால் பறிக்கப்பட்டார்.

அவரின் சிறுபிராயந் தொட்டே அவரோடு இன்பமாகப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இவர் ஒரு கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் கல்லூரியை விட்டு நீங்கிய காலந்தொட்டே சமூகத்திற்குத் தன்னலமற்ற சேவை புரிந்தார். முக்கியமாக நாதியற்றவர்களுக்குத் தன்னாலான உதவியைச் செய்யத் தவறவில்லை. என்றும் இன்முகத்தோடு காணப்பட்டவர் எல்லோராலும் விரும்பப்பட்டார். நேர்மையான குணமும், சேவை செய்யும் மனப்பான்மையும் அவரிலே சிறந்து காணப்பட்டது.

காலப்போக்கில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தேசியத் தலைவர்களுள் ஒருவராய்த் திகழ்ந்திருப்பார். சமூக சேவையில் தன் வாழ்நாளைக் கழித்தாலும் அவரின் அன்புத் தாயாகிய சரஸ்வதி அம்மா வெற்றிவேலுப்பிள்ளை மேலும் பிரியமுள்ள மனைவியாகிய லலித்தா யோகேஸ்வரன், மேலும் அவருக்கிருந்த கவனம் இம்மியளவும் குறையவில்லை.

அவருடைய பூத உடல் இவ் உலகை விட்டு நீங்கினாலும் ஈடு இணையற்ற அவரது ஆத்மா அவர் உற்றார் உறவினரைவிட்டு அகலவில்லை. என்றும் எல்லோர் இதயத்திலும் அவர் வாழ்ந்துகொண்டேயிருக்கிறார்.

அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

ஆர். சி. நவராஜா

இளைப்பாறிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி (4338)



## ஓராண்டு நினைவஞ்சலி



பத்மநாதன் செல்வநாதன் (ரூபன்)

தோற்றம்: 21 - 05 - 1971 மறைவு: 02 - 06 - 1987

இவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தந்தை - பத்மநாதன் தாய் - செல்வராணி

சகோதரர்கள்: சுதர்சினி, தஷாயினி, மதியழகன், வஜீரா

நண்பர்கள்: தயாளன், மதியழகன், ஜெயகுமார், ரமணன், உற்றார், உறவினர்.

கொக்குவில் கிழக்கு,

கொக்குவில். (4498)



## HORIZON ENTERPRISES

# குவைத் - சவூதி

## உடனடி வேலைவாய்ப்புகள்

### இன்டோர் கிளினேர்ஸ், பணிப்பெண்கள்

( ஆண் - பெண் )

### குவைத் தொழில்

- காரியதரிசி (Secretary)
- ஆட்டோ எலெக்ரிசியன்
- கார்டென்டர் & பெயின்டர்
- மெக்கானிக்குகள்
- கடிகாரம் திருத்துநர்கள்
- ரேடியோ தொழில்நுட்பவியலாளர்
- கேர்ட்டின் தயாரிப்போர்
- பெண் தையற்காரர்கள்
- மரவேலைக்காரர்கள் (Carpenters)
- பெயின்டர்கள்
- டெயிலர்கள் மெஷின் ஒபரேட்டர்கள்
- இன்டோர் கிளினேர்ஸ் (ஆண்கள்)
- இன்டோர் கிளினேர்ஸ் (பெண்கள்)
- ஹவுஸ் ட்றைவர்கள்
- கனரக வாகன ட்றைவர்கள்
- குழாய் வேலைக்காரர்கள் (Plumpers)

★ பாஸ்போட். போண்ட் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

★ வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் ★ மேலதிக வேலை உண்டு ★ உணவு, தங்குமிட வசதி, சீருடை, மருத்துவ வசதி இலவசம் ★ விடுமுறை, காப்புறுதி கிடைக்கும் ★ 2 வருட ஒப்பந்தம் ★ கடவுச்சீட்டு, 10 புகைப்படங்களுடன் காரியாலய நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

உபமுகவர்:

க. பஞ்சாட்சரம் (காந்தி)

சுபேந்திரா அச்சகம் கட்டுவிளானை

R. D. S. கட்டிடம் ஏழாலை - மேற்கு

கே. கே. எஸ். றோட் ஏழாலை

மல்லாகம்

தலைமைக் காரியாலயம்:

No. 9, 19th Lane,

Kollupitiya,

COLOMBO - 3

(4636)



இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் [illegible] அச்சகத்தில் 21 - 06 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna [illegible] 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org